வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2017
## Term Examination, July - 2017

FWC

| தரம் :- 12 (2018) | அரசியல் விஞ்ஞானம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| (1) 3 | (11) 2 | (21) 5 |
| (2) 2 | (12) 2 | (22) 2 |
| (3) 2 | (13) 1 | (23) 4 |
| (4) 4 | (14) 3 | (24) 1 |
| (5) 4 | (15) 4 | (25) 3 |
| (6) 5 | (16) 1 | |
| (7) 1 | (17) 2 | |
| (8) 1 | (18) 3 | |
| (9) 4 | (19) 5 | |
| (10) 3 | (20) 4 | |

(25 x 2 =50புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

(1) அ) வரலாற்று அணுகுமுறை ஆ) முறைமை பகுப்பாய்வு அணுகுமுறை
(2) அ) தாராண்மைவாத சிந்தனைவாத குழுவினர் ஆ) பாசிசவாத குழுவினர்
(3) அ) மாக்கியவல்லி ஆ) கொப்ஸ்
(4) அ) ஜோன் மெனாட் ஜேன்ஸ் ஆ) ஜேன்ஸ் கோட்பாடு
(5) அ) G.G. ஆந்திரே ஆ) தோமஸ் காரே
(6) அ) வெஸ்பாணியா உடன்படிக்கை ஆ) மொண்டி வீடியோ உடன்படிக்கை
(7) அ) இலங்கை தேசிய காங்கிரஸ் ஆ) லங்கா சமசமாஜகட்சி
(8) மதப்புனருத்தமான இயக்கம் ஆ) மதுஒழிப்பு இயக்கம்
(9) உத்தியோக பற்றுள்ளவர் - 11 ஆ) உத்தியோகபற்றற்றவர் - 10
(10) தெரிவு வழி உறுப்பினர்கள் - 50
நியமன உறுப்பினர்கள் - 08
பதவிவழி உறுப்பினர்கள் - 03

(10 x 1 =10புள்ளிகள்)

### பகுதி - II - (B)

(1) 1)
- ✦ மனிதன் அரசியலைப் படிப்பதற்கு இரு வழிமுறைகள் உண்டு அவையாவன முறைசார் வழிமுறை, முறைசார வரிமுறை ஆகும்.
- ✦ முறைசார் வழிமுறைகள் ஆக பாடசாலை, பல்கலைக்கழகம், மற்றும் முறையாக ஒழுங்கு படுத்தப்பட்ட அரசியல்கல்வி வேலைத்திட்டங்கள் ஆகும்.
- ✦ முறைசார் வழிமுறைகள் ஆக குடும்பம், சமய நிறுவனங்கள், ஊடகங்கள், சமவயதுக்குழுக்கள், அபிப்ராயத் தலைவர்கள், பொருளாதாரக் காரணிகள், அரசாங்கம், அரசியல் கட்சிகள் ஆகும்.

2) ✦ அரசியல் பங்கேற்பை வரைவிலக்கணப்படுத்துதல்

✦ தேர்தல்களின் போது வாக்குரிமையைப் பிரயோகித்தல்

✦ அமுக்கக் குழுக்களின் உறுப்புரிமையினைப் பெற்று அதனூடாக அக்குழுக்களின் செயற்பாடுகளில் பங்கேற்றல்

✦ மக்கள் பிரதிநிதிகளோடு தனிப்பட்ட முறையில் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடுதல்

✦ அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் பங்கேற்றல்

✦ தனிப்பட்ட முறையில் சுகோதார மனிதர்களுடன் கலந்துரையாடுதல்

✦ பொதுவான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தல் போன்றவற்றை விளக்கமளித்தல்

3) ✦ ஒரு ஜனநாயக அரசியல் முறைமையின் பிரதான அரசியல் செயபாட்டாளர் என்ற வகையில் ஜனநாயக மூலக்கொள்கைகளுக்கும் ஊடக செயற்பாட்டிற்கும் இடையில் தொடர்பு நிலவ வேண்டும் என்பதை ஊடக ஜனநாயகம் ஆகும்.

✦ சுதந்திரமான ஊடகம் ஜனநாயகத்தின் "காவல்நாய்" என கருதப்படுகிறது

✦ ஜனநாயக அரசியல் முறைமையில் வாசகர்களுக்குச் செய்திகளையும், தகவல்களையும் வழங்குதல் ஊடகத்தின் பணி மட்டுமன்றி அரசியல் செயற்பாட்டளராகவும் செயற்படுகிறது.

✦ ஊடகம் பின்வரும் வகையில் செயப்படுகிறது

அரசியல் தகவல்ளை வாசகர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்

தகவல்களின் உருவ அமைப்பை ஒழுங்குபடுத்தல்

அரசியல் சமுதாயப்படுத்தல் செயன்முறையில் ஒரு முகவர்

மக்களை அரசியல் ரீதியாக அறிவூட்டி முன்னெடுத்து பெரிதும் ஒரு செயற்பாட்டாளர்

அரசியல் விடயங்கள் பற்றிவாத, பிரதிவாதங்களை நிகழ்த்துகின்றது.

4) ✦ அரசின் தோற்றம் பற்றிய விபரல்வாத கருத்து பெரும்பாலும் சமூக படிமுறை வளர்ச்சி கோட்பாட்டினை பெரும்பாலும் ஒத்ததாகும்.

✦ சிதறிக் கிடந்த மனிதன் சிலர் சமூக பண்புகளினால் ஒன்றினைத்து ஒரு பொது இடத்தில் நிலையாக குடிகொண்டு சமூதமாக ஒழுங்கமைந்தமையே அரசின் தோற்றம் ஆரம்படியாரும்.

✦ "சமூகம் தோன்றி படிமுறையாக வளர்ச்சியடைந்த போது அரசு தோன்றியது" என்று மெக் ஐவர் கூறுகின்றார்

✦ அரசின் வளர்ச்சி பற்றி தாரான கருத்தும் பெரும்பாலும் சமூக படிமுறை வளர்ச்சி பற்றிய கருத்தினை ஒத்ததாகும்.

✦ வேமரபு அரசுமுறை, கீழைத்தேய அரசுமுறை, கிரேக்க நகர அரசுமுறை, உரோமப் பேரரசு முறை, மானியமுறை அரசு ஆகிய பல்வேறு அரசுகட்டங்களை தாண்டி இன்றைய தேசிய அரசு முறையாக வளர்ச்சியடைந்துள்ளது.

✦ தேசிய அரசு முறையானது தலையிடாத அரசு, நலன்புரி அரசு என்ற கட்டங்களைத் தாண்டி தற்போது குறைந்த பட்ச அரசு உருவாகி வருகின்றது.

✦ அரசின் எதிர்காலம் மனிதன் இவ்வுலகில் வாழும் வரை அரசும் இல்லாதொழியாது. நிலைத்து நிற்கும்

✦ சமூகத்தின் பொது நன்மையை நிறைவு செய்வதற்கு அரசு அத்தியவசியமாக இருப்பதனால் அது தொடர்ந்து செய்யப்படும்.

✦ அரசு எதிர்காலத்திலும் மாற்றமுற்று வளர்ச்சியுறும் என்ன மாற்றங்கள் நிகழ்ந்தாலும் மனிதன் இவ்வுலகில் வாழும் வரை அரசு அழியாது நிலைத்திருக்கும்.

(2) 1) ✦ அரசியல் சமுதாயப்படுத்தல் விளக்கமளித்தல் சமுதாயப்படுத்தல் முகவர்களை குறிப்பிட்டு விளக்கமளித்தல்

- கல்வி நிறுவனங்கள்
- சமய தாபனங்கள்
- சமூக நிறுவனங்கள்
- அபிப்பிராயத் தலைவர்கள்
- பொருளாதார காரணிகள்
- ஊடகம்
- அரசியல் கட்சி
- அரசாங்கம்

2) ✦ அரசியல் கலசாரம் விளக்கமளித்தல்

✦ அரசியல் காலாசாரம் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்

- அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றி மக்களிடம் உள்ள தெளிவு
- அரசாங்கம் எதனைச் செய்யவேண்டும் , எதனைச் செய்யக் கூடாது என்பன பற்றியும் இறுதி மதிப்பீட்டினை தீர்மானிப்பதற்கு மக்களிடம் உள்ள புரிந்துணர்வு
- அரசியல் குறியீடு குறித்த இணைப்பும் கௌரவமும்

✦ அரசியல் கலாசாரத்தின் வகைகள்

- வளர்ச்சியற்ற அரசியல் கலாசாரம்
- முறை விருத்தி அரசியல் கலாசாரம்
- வளர்ச்சியடைந்த அரசியல் கலாசாரம்

போன்றவறை விளக்கமளித்தல்

3) ✦ விகிதாசார பிரதிநிதித்துவம் பற்றி விளக்கமளித்தல்

✦ விகிதாசார பிரதிநித்துவம் நிறை, குறைகள் விளக்கமளித்தல்

✦ நிறைகள்

- ஜனநாயக தன்மை வாயித்ததாகும்
- சகல பலம் வாய்ந்த அபிப்ராயங்களும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்கின்றது
- வாக்காளர்களின் விருப்பு பரந்ததாகக் காணப்படுதல்
- பிரதான அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் குறைத்தல்
- இடைத்தேர்தல்கள் நடைபெறாமை
- பல்லின சமூக முறையில் பெரும் பாண்மை இனம் மட்டுமன்றி சிறுபாண்மை இனங்களும் நியாயமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளும்.

**குறைகள்**

- பலகட்சி முறை வளர்ச்சியுறுவதற்கு காரணமாக அமைதல்
- கூட்டராங்கம் உருவாகுதலும் அவை பலவீனமான அரசாங்கமாக இருத்தலும்
- அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் வளர்ச்சியுறுதல்
- நிராகரிக்கும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்
- வெட்டுப்புள்ளி முறை போனஸ் செனட் வழங்கப்படுதல் போன்றவற்றால் விகிதாசாரமும் ஜனநாயகமும் பாதிக்கப்படுதல்
- குறைந்த அரசியல் அறிவும், பலவீனமான அரசியல் கலாசாரமும் நிலவும் அரசியல் சமூகங்களில் சிறப்பாக நடாத்த முடியாமை

4) ஓர் உத்தியோக கருத்தின் அடிப்படையில் ஆட்சி ஒழுங்கமைத்து இருந்தலும் ஏனைய அரசியல் பொருளாதார கருத்துக்கள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்கப்படுதலும்,

- 1951 இல் Hannah Ardent வெளியிட்ட The origm of Totalitarianism என்ற நூல் அனைத்தாண்மை சொல்ல பயன்படுத்தப்பட்டது
- தனிக்கட்சி ஆதிக்கம்
- அடக்கு முறை ஆட்சி
- பொது தன்மைகள் பற்றி அரசாங்கமே பொருள் கூறுதல்
- அரசின் தனியுரிமைக்கு கீழ்ப்பட்ட பொருளாதாரம்
- அரசின் தனியுரிமைக்கு கீழ்ப்பட்ட ஊடகம்
- ஆட்சி முறையினை எதிர்ததலினை அரச துரோகம் செயலாக கருதுதல்

பகுதி II - C

(3) 1) இலங்கை தேநிய காங்கிரஸ் பற்றி விளக்கமளித்தல்

- பிரித்தானிய ஏகாபத்தியத்தின் கீழ் உள்நாட்டுச் சுயாட்சில் பொறுப்பைப் பெற்ற ஒரு பிரதிநிதியில் நிலையை பெற்றுக் கொள்ளல்
- யாப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்களைப் பெற்றுதல் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- மக்கள் நன்மை பயக்கும் வகையில் வரி முறையைச் சீர்திருத்தல்
- தேசிய செல்வத்தில் அதிக தொகையை கல்வி முறைக்கு ஒதுக்கியமை
- 14 வயதைதாண்டிய சகலருக்கும் பாடசாலைக் கல்வி கட்டாயமாக்குதல்
- இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தை தாபித்தல்
- சிறுவர் ஊழியத்தை ஒழித்தல்
- தேசத்தின் உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்கு ஏதுவான விஞ்ஞான தொழிநுட்ப, விவசாய, வர்த்தகக் கல்வியை விருத்தி செய்தல்.
- தென்னாபிக்காவில் ஆசிய மக்களுக்கு விதித்தப்பட்ட சட்டங்களை அகற்றுவதற்கு பலவந்தப்படுத்தல்.

2) சமய, கலாசாரங்களை பாதுகாக்கும் நோக்குடன் (1870 - 1915) காலப்பகுதியில் சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் ஆரம்பித்தனர். பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ ஆங்கில கல்வி எதிராக பௌத்த, இந்து, இஸ்லாமிய தலைவர்கள் மிகப்பெரிய பங்களிப்பை ஆற்றினார்.

- பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கு ஆரம்பகால, தலைவர்கள் ஹிக்கடுவ சிறி சுமங்கலதேரர், மீகடுவத்தகுணாநந்ததேரர், கேணல் ஓல்கொட், அநாகரிகதர்பால, போன்றோர்.
- 1912 ம் ஆண்டு மது ஒழிப்பு தலைவரான D.S சேனநாயக்க, F.R சேனாநாயக்க , D.B.P ஜயதிலக, C,w,w கன்னங்கரா, A.E குணசிங்க போன்றோர்
- இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு ஆறுமுகநாவலர் மிகப்பெரிய பங்களிப்பை ஆற்றினார். இவர் யாழ் / இந்துக் கல்லூரி நிறுவி தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், இந்து சமய மறுமலர்ச்சியிலும் புத்துயிர்பு ஏற்படுத்தினார்.
- மற்றும் பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாச்சலம் , இந்துசமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு தலைமைதாங்கினார்.
- இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்கு வழக்கறிஞர் சித்தி லெப்பை மிகப்பெரிய பங்களிப்பை ஆற்றினார். இவர் மருதானை சாஹிராக்கல்லூரி ஆரம்பித்தார்
- மற்றும் டி.பி. ஜயா, ஐ.எல்.எம். அப்துல் அஷிர் போன்றோரும் இஸ்லாமிய சமய

மறுமலர்ச்சியின் பங்கற்றிய முக்கிய தலைவர்கள் ஆவார்.

(4) 1) 1833 அரசியலமைப்பு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட யாப்பு கோல்புருக் - கமரன் யாப்பு ஆகும்.

- ✦ கோல்புருக்கின் சிபார்சுகள்
  - தேசாதிபதியின் அதிகாரம் குறைத்தல்
  - நிர்வாகவிடயங்களில் சட்ட நிர்வாக சபையையும் சட்ட நிரூபண சபையும் தாபித்தல்
  - ஐந்து மாகாணங்களின் கீழ் ஒற்றை நிர்வாகப் பிரிவு முறை ஏற்படுத்தல்
  - சிவில் சேவையில் சேர்வதற்கு இலங்கையருக்கு கதவைத் திறந்துவிடுதல்
  - இராஜகாரிய முறையினை ஒழித்தல்
  - அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை ஒழித்தல்
  - ஒரு வைப்பு வங்கி தாபித்தல்
- ✦ கமரனின் நீதித்துறை சிபார்சுகள்
  - தேசாதிபதியின் கட்டுப்பாட்டில் சிவில் நீதிமன்றங்களை விடுவித்தல்
  - முழுநாட்டையும் பாதிக்கும் வகையில் ஒற்றை நிதித்துறை முறைமையைத் ஸ்தாபித்தல்
  - ஐரோப்பியர் தொடர்பான நீதிமன்றம் இல்லா தொழித்தல்
  - வழக்கு விசாரனைகளின் போது இலங்கை மதிப்பீட்டாளர்கள் நீதிபதிகளுடன் ஒன்றினைந்து செயற்படுதல்
  - பிரதமநீதியரசரையும் ஏனைய இரண்டு நீதி அரசர் கொண்ட உயர்நீதி மன்றத்திற்கு முழு நீதி அதிகாரங்களையும் ஒப்படைதல்.

2) ✦ மனிங் டெவன்ஷியர் சட்ட நிரூபணசபையில் 49 காணப்பட்டனர். 12 பேர் உத்தியோக பற்று உள்ளோர், 37 பேர் உத்தியோக பற்றவர்கள்
37 பேர் உத்தியோகபற்றவர்கள்

- ✦ 23பேர் பிரதேச வாரியான தேர்தல் மூலம், எஞ்சிய 11 பேரும் இனவாரியான தொகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.
- ✦ ஒரு வேட்பாளராக நிற்பதற்கு 25 வயதை அடைந்தவர், ஆங்கில மொழிய எழுத வாசிக்க, பேச தெரிந்தவர், 1500/= வருடாந்த வருமானத்தை பெறுபவர் அல்லது 5000/= குறையாத அசையாச் சொந்தினை உடையவர் ஆகவும் நகர்புறம் ஒன்றின் வருடாந்தம் 500/= வாடகை வீடு ஒன்றின் அல்லது கிராம புறத்தின் வருடாந்தம் 400/= செலுத்தும் வீடு ஒன்றின் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- ✦ வாக்குரிமை ஆண்களுக்கு மட்டும்
- ✦ வாக்குரிமை பெறுவதற்கும் தகுதி காணப்பட்டது
- ✦ ஆட்சியின் முழுப்பொறுப்பும், இறுதி அதிகாரமும் தேசாதிபதியிடமே காணப்பட்டது.

3) டொனமூர் அரசாங்க முறையில் பிரதம செயலாளர், நிதிச்செயலாளர், நீதிச்செயலாளர் என்ற மூன்று அரச அதிகாரிகள் பதவி வசித்தனர்.

- ✦ பிரதம செயலாளர் உத்தியோக ரீதியாக அமைச்சரவையினை முன்வைக்கும் உரிமையும் பெற்றிருந்தார்.

- நிர்வாக குழு மக்களின் கூட்டங்களிலும் பங்கு பற்றினர்
- நிதிச் செயலாளர் நிதிவிடயங்களுக்கு பெறுப்பானவர், தமது கடமைகளை ஆற்றும்போது அலுவல்கனை நடாத்துதல், ஆலோசனை கூறுதல், மேற்பார்வை செய்தல் என்ற மூன்று வகையில் மேற்கொள்கின்றார்" விளக்க வேண்டும்.
- நீதிசெயலாளர் நீதி பரிமாற்றத்திற்கு பொறுப்பாக இருப்பார். இவர் நீதி சம்ந்தமான விடயங்களை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், அரசின் பெயரில் வழக்குகளை நடாத்துதல், அரசாங்க தேர்தல்களை நடாத்துதல் சட்டங்களை வரைதல் என்பது இவரின் கடமை ஆகும். இதனை விளக்க வேண்டும்.

4) ✦ டொனமூர் அரசியலமைப்பின் கீழ் அரசாங்கத்தின் சகல பொறுப்புக்களையும் தொடர்ந்து தேசாதிபதிக்கு ஒப்படைப்பதற்கான ஆயத்தம் இருக்கவில்லை. அதன்படி ஆட்சி பொறுப்பின் ஒரு பகுதியை இலங்கையர்களிடம் ஒப்படைத்ததுடன் எஞ்சிய பகுதி தேசாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

- இவ்வாறு விளங்கும் தேசாதியின் அதிகாரங்கள் பலவகையாக நோக்கலாம்

1) தேசாதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட சட்டத்துறை அதிகாரங்கள்
2) அரசாங்க சேவையோடு தொடர்பான அதிகாரங்கள்
3) தேசாதிபதி ஆட்சி கருமங்கள் தொடர்பாக தலையீட்டாளராகச் செயற்பட்டமை

போன்ற மூன்று விடயங்களை விளக்கமளித்தல்

The National e-learning Portal for The General Education